10.11.2025 வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 55 /2015 ) திரு.செல்லத்துரை.

5 ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) நான் இந்த வழக்கில் 3 ம்வாதி என்றால் சரிதான். 4 ம்பிரதிவாதி என் உடன் பிறந்தவர் என்றால் சரிதான். இந்த வழக்கில் 1,2,5,6 வாதிகள் ராஜா என்ற கருப்பசாமியின் மகன்கள் என்றால் சரிதான். எனக்கு 1,2,5,6 வாதிகள் பங்காளிகள் என்றால் சரிதான். 1,2,3,4 பிரதிவாதிகளின் இறந்து போன மாணிக்கவாசகம் பிள்ளைகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் 5 ம்பிரதிவாதி ராமேஷ்க்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து வாதியாக இருந்து அ.வ.எண்.8/2018 வழக்கினை என் மீதும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்திருந்தார் என்றால் சரிதான். இரண்டு வழக்குகளும் சமூகம் நீதிமன்ற உத்தரவுப்படி சேர்த்து நடந்து வருகிறது என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 வது வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன வேலை பார்க்கிறேன் என்றால் பழைய டயர் வாங்கி கேரளாவிற்கு அனுப்பிவைத்துக் கொண்டு இருந்தேன் தற்போது ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். பிராதை சர்வேயர் அளவீடு செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய மனு மற்றம் 2 வழக்குகளை சேர்த்து நடத்துவதற்கு மனு, சீர்திருத்த மனு ஆகியவற்றை எங்களால் தாக்கல் செய்யப்பட்டள்ளது என்றால் சரிதான். அந்த மனுக்கள் வாதிகளுக்காக வேண்டி வழக்கின் 1 ம்வாதி பூமாரியப்பன் அபிடவிட் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். வழக்கு விசாரணைக்கு வந்த போது 1 ம்வாதியான பூமாரியப்பன் தான் முதல் விசாரணை நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவரை குறுக்கு விசாரணைக்குபோடப்பட்டுள்ள நிலையில் படித்தவர் விவரமான ஆள் என்ற நிலையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் உண்மையில்லை அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் வந்துள்ளேன். உடல்நிலை சரியில்லை என்பதற்கு என்ன பிரச்சனை என்றால் இதய பிரச்சனையால் 10 வருடங்களாக மாத்திரை உட்கொண்டுள்ளதாலும், மது அருந்தி சுயநினைவு இல்லாமல் இருந்து வருகிறார். 1 ம்வாதிக்கு இதயத்தில் பிரச்சனை என்பதை காட்டக்கூடிய மருத்துவ சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2) நான் தாக்கல் செய்துள்ளதாக மருத்து ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

வழக்கில் 1ம் தபசில் சொத்து வா.சா.ஆ.1ன் மூலமாக 1ம்வாதிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். பிராது 2வது தபசில் சொத்து வா.சா.ஆ.2ன் மூலம் 2ம்வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 3ம்தபசில் சொதததை வா.சா.ஆ.3ன் மூலம் நானும், எனது சகோதரரும் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். 4வது தபசில் சொத்தை வா.சா.ஆ.4ன்மூலம் 5ம்வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 6ம் தபசில் சொத்து வா.சா.ஆ.8, வா.சா.ஆ.16ஆவணம் மூலம் 5ம்பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்டது என்றால் இல்லை 2012ஆம் ஆண்டு 1முதல் 5 வாதிகளுக்கு 23அடி பாதையாக கிரையம் கொடுத்துள்ளார்கள். 5ம்பிரதிவாதிகிரையம் பெற்றதாக வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் மால் தவறுதலாக போடப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன். வாதிகளாகிய நாங்கள் பிராது 1முதல் 5 தபசில் சொத்துக்களுக்கு போவதற்கு பாதையாக 5ம்பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்து தான் பாதை என்று சொல்லி தான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். 5ம்பிரதிவாதி அ.வ.எண்.8/2018ல் பிராது 6ம்தபசில் சொத்தினை அவருக்கு தனித்து கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றும் இந்த வழக்கின் வாதிகளாகிய எங்களுக்கு உரிமையும், பாதையும் கிடையாது என்று தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் நாங்களும் பாதை உண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அ.வ.எண்.55/2015,அ.வ.எண்.8/2018 வழக்கின் விவரங்கள் நன்கு தெரியும் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை நிருபண வாக்குமூலம் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அதனை படித்துப்பார்த்து நான் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதில் எனது வயது 40 என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது உண்மையான வயது தானா என்றால் ஆமாம். வா.சா.ஆ.11 ஆவணத்தில் வாக்காளர் அடையாள அட்டையில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தானா என்றால் ஆமாம். வாக்காளர் அடையாள அட்டையில் பிறந்த ஆண்டு 1983 என்று கண்டுள்ளது என்றால் அது தவறுதலாக உள்ளது. வாக்காளர் அடையாள அட்டை பொய்யானதா என்றால் பிறந்த தேதி தவறனாது. 5ம்பிரதிவாதி அ.வ.எண்.55/2015ல் எதிர்வழக்குரையிலும் அவர் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.8/2018 வழக்கிலும் தாவாச்சொத்து அமைவிடத்தை காண்பிக்கக்கூடிய உத்தேச வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

3) 2வழக்குகளிலும் 5ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபடம் ஒரே மாதிரியாக உள்ளதா என்றால் ஒன்றாகத்தான் உள்ளது. எனது தரப்பில்

இருவழக்கிலும் தாவாச்சொத்தை காண்பிப்பதற்கு உத்தேச வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அ..வ.எண்.8/2018 வழக்கில் பிராதுடன் தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபடத்தை காண்பித்து 3,4 வாதிகள் வீடு அமைவிடத்தின் கிழக்கு பக்கம் அமைந்துள்ளதா என்றால் சர்வே எண்.48/3 ன் மேல்பக்கம் உள்ளது. தாவாச்சொத்தின் கீழ்பக்கம் உள்ளது என்றால் கீழ்புறம் உள்ளது. எங்கள் வீட்டிற்கு மேற்கே 1 ம்வாதி வீடு உள்ளதா என்றால் உள்ளது. 1 ம்வாதியின் வீட்டிற்கு தெற்கே 5 ம்வாதியின் வீடு உள்ளதா என்றால் உள்ளது. 1 ம்வாதியின் வீட்டிற்கு மேற்கே 2 ம்வாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். 2 ம்வாதியின் வீட்டிற்கு தெற்கே 6 ம்வாதி வீடு உள்ளது என்றால் சரிதான். நாங்கள் கிரையம் பெற்ற 1 முதல் 3 தபசில் சொத்திற்கு வடக்கே 5 ம்பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்து உள்ளது என்றால் தவறு வடக்கே பாதை தான் உள்ளது. வரைபடத்தில் காலியிடமாக உள்ளது என்றால் வரைபடம் 5 ம்பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அது காலியாக காண்பிக்கப்பட்டுள்ளது. 5 ம்பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கு வடக்கே அவரது தந்தை தங்கராஜ் இடம் உள்ளது என்றால் வீடு உள்ளது. 5 ம்பிரதிவாதியின் தந்தை காலிமனையாக வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் இல்லை ஏற்கனவே சுப்பிரமணியன் வீட்டை தான் கிரையம் பெற்றுள்ளார். 5 ம்பிரதிவாதியின் தந்தை தங்கராஜ் வீட்டிற்கு மேற்கே 1 ,2,5,6 வாதிகளின் தகப்பனார் ராஜா என்ற கருப்பசாமி தேவர் கிரையம் பெற்ற இடம் உள்ளதா என்றால் தவறு ராமையா பிள்ளை மகன் ராமேஷ் வீடு உள்ளது. ராஜா என்ற கருப்பசாமி தேவருக்குப் பாத்தியப்பட்ட தற்போது மாணிக்கவாசகத்திடம் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த தேதியில் தான் அதே தேதியில் தான் சுப்பிரமணியம் மைத்துனருக்கு இந்த வழக்கின் 6 ம்தபசில் சொத்திற்கான கிரையத்தொகையும் கூடுதலாக அந்த இடத்தையும் எழுதிக்கொடுத்துள்ளார். வாதிகளாகிய நாங்கள் கிரையம் பெற்றுள்ள 1 முதல் 5 தபசில் சொத்திற்கு திருமங்கலக்குறிச்சி கிராம சர்வே எண்.48/2,48/3 ல் உள்ளது என்றால் சரிதான். 3,4 வாதிகளாகிய நாங்கள் கிரையம் பெற்ற இடம் திருமங்கலக்குறிச்சி கிராம சர்வே எண்.48/3 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.48/3 க்குமேற்கே சர்வே எண்.48/2- 1,2,5,6 வாதிகள் கிரையம் பெற்ற சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அது 1,2,4,5 தபசில் சொத்துக்கள் என்றால் சரிதான். சர்வே எண்.48/2 க்கு மேற்கே சர்வே 48/1 உள்ளது என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்களின் படி சர்வே எண்.48/2,48/3 புஞ்சை நிலமாக காண்பிக்கப்பட்டு நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன இடத்திற்கு வடக்கே பழைய நத்தம் சர்வே எண்.51/1 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு பட்டா எதுவும் கிடையாது இன்று வரை அரசாங்க இடமாகத்தான் உள்ளது. சர்வே எண்.51/1 க்கு வடக்கே 5 ம்பிரதிவாதியின் தகப்பனார் தங்கராஜ் இடம் சர்வே எண்.51/1 ல் தான் உள்ளது என்றால் சரிதான் ஊரே சர்வே எண்.51/1 ல் தான் உள்ளது. தங்கராஜ் இடத்திற்கு மேற்கே ராஜா என்ற கருப்பசாமி தேவர் இடம் சர்வே எண்.51/1 உள்ளது என்றால் அதற்கு இடையே ராமையா பிள்ளை குமாரர் ரமேஷ் இடம் உள்ளது அந்த இடமும் சர்வே எண்.51/1 ல் தான் உள்ளது. வாதிகளாகிய நாங்கள் அனைவரும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்களும் ஒரே தேதியில் முடிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 5 ஆவணங்களையும் மாணிக்கவாசகம் பிள்ளை மக்கள் 1 முதல் 4 பிரதிகளிடமிருந்து கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். பிராதில் கண்ட சொத்துக்கள் மாணிக்கவாசகம்பிள்ளை மற்றும் அவரது பிள்ளைகளான மக்கள் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். அவாகளுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய உரிமை ஆவணத்தை காட்டவில்லை என்றால் சரிதான் பூர்வீகமாகப்பாத்தியப்பட்டது. பிராது தபசில் சொத்து மாணிக்கவாசகம் பிள்ளைக்கோ 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கோ பாத்தியப்பட்டது என்று உரிமை ஆவணமான பத்திரத்தை தாக்கல் செய்துள்ளனோ என்றால் இல்லை யூ.டி.ஆர்.பட்டா தான் உள்ளது. பட்டாவை தவிர்த்து அவர்களுக்கு பாத்தியப்பட்டதாக காட்டக்கூடிய வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை கைவசம் உள்ளது தாக்கல் செய்வேன். மாணிக்கவாசகம் பிள்ளை உடன் பிறந்தவர்கள் தான சங்கரநாராயணன் பிள்ளை, மீனாட்சிநாதன் பிள்ளை என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்தற்கிணங்க வேறு தேதிக்குஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,

**கோவில்பட்டி,**
10.11.2025.